சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

புள்ளி

புவியியல்

தரம் - 09 இறுதித் தவணைப் பரீட்சை-2016

சுட்டெண் : .....

பகுதி - 1

நேரம்
2 மணித்தியாலம்

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

. இல 1-5 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து எழுதுக.

.

1) புவிக்கோளத்தில் 71% ..... ஆகும்.
(வளிக்கோளம், நீர்க்கோளம், கற்கோளம்)

2) ..... என்பவர் சூழலை மிகவும் நேசித்த செவ்விந்தியத் தலைவராவார்)

(அரிஸ்டோட்டில், சியாட்டல், சீசர்)

3) உலக மரபுரிமைகளுள் ஒன்றாகக் கருதப்படும் பாமியன் புத்தர் சிலை ..... அமைந்துள்ளது.
(இந்தியாவில், பாகிஸ்தானில், ஆப்கானிஸ்தானில்)

4) 1985 ம் ஆண்டு பங்களாதேசின் ..... தலை நகரத்தில் தெற்காசிய நாடுகள் இணைந்து சார்க் அமைப்பினை தோற்றுவித்தன.
(பாங்கொக், டாக்கா, திம்பு)

5) இரண்டு மலைத்தொடர்களுக்கு இடைப்பட்ட தாழ் நிலம் ..... என அழைக்கப்படும்.
(பள்ளத்தாக்கு, கணவாய், மேட்டுநிலம்)

- **6- 10 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

06. புவி 23 ½ பாகை சரிந்திருப்பதல் வட அரைகோளத்திலும் தென்னரைக்கோளத்திலும் மாறுபட்ட பருவகாலங்கள் நிலவுகின்றன. ( )

07. தேயிலை , தென்னை ஆகிய பயிர்கள் நுகர்வு பயிர்ச் செய்கையின் கீழ் பயிரிடப்படும் பிரதான பயிர்களாகும். ( )

08. குவங்கோ ஆசியாவின் நீளமான நதியாகும் ( )

09. பனை ,வட பிரதேசத்தில் இயற்கையாக வளருகின்ற பிரதான தாவரமொன்றாகும். ( )

10. இயற்கை வளங்களின் அதிகரித்த பாவனையால் சூழல் பாதிப்பு அதிகரித்துள்ளது. ( )

www.ikedu.lk

- **11- 15 தரப்பட்டுள்ள வினாக்களுக்கு இடைவெளிக்கு பொருத்தமான விடையை எழுதி பூரணப்படுத்துக.**

11) உலகின் உயர் மேட்டு நிலமான ..... ஆசிய கண்டத்தில் அமைந்துள்ளது.

12) பருவகால மாற்றங்களைத் தெளிவாக காணமுடிவது .....பகுதிகளிலாகும்

13) ஆசிய பிராந்தியத்தை ஐரோப்பாவுடன் இணைக்கும் போது ..... என அழைக்கப்படும்

14) எகிப்து வாசிகளின் வழிபாட்டுக்குரிய ஆட்டென்..... கடவுள் ஆவார்.

15) ஓசோன் வாயுக்களில் 90% மானவை .....இல் காணப்படுகின்றன.

- **16 - 20 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

16) தென்னாசிய வலயத்திற்கு மாத்திரம் உரித்தான புவியியல் அம்சங்களை உள்ளடக்கியுள்ள விடைத் தொகுதி.

1. குவாங்கோ நதி, அல்டாய் மலை, திபெத் மேட்டுநிலம், கோபிபாலைவனம்
2. நர்மதா நதி, இந்துகுஷ் மலை, தக்கண பீடபூமி, தார்பாலைவனம்
3. அமூர்நதி, சுலைமான் மலை, பமிர் முடிச்சு, தக்லமாகன் பாலைவனம்
4. யூப்ரடீஸ் நதி, சாகோஸ் மலை, எனடோலியன் பீட பூமி, லிபிய பாலைவனம்.

17) ஓசோன் படை பாதிப்பினால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்பு ஒன்று அல்லாதது.

1. காலநிலை மாற்றங்கள் ஏற்படுதல்
2. உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படல்
3. புவி வெப்பமடைதல் அதிகரித்தல்
4. வேளாண்மைக் கைத்தொழில் பயிர்களின் விளைச்சல் குறைதல்

18) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றை தெரிவு செய்க.

1. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் முதலாவது கட்டம் விக்டோரியா திட்டத்துடன் ஆரம்பமாகின்றது
2. துறைமுக அருணோதய வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு கடற்கரையில் மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.
3. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய பயிராக பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
4. பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் கொழும்பு பெருநகரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ளது.

www.kedu.lk

19) 1. 50000 தரைத்தோற்ற இடவிளக்கவியல் படத்தில் காணப்படும் கலாசார அம்சங்களை மட்டும் காட்டும் விடை

1. தரைத்தோற்றம், வடிகாலமைப்பு, கரையோர அம்சங்கள்
2. பள்ளத்தாக்கு, சுவடு, கணவாய்,
3. இயற்கைத் தாவரவகை, சேற்று நிலம், சதுப்பு நிலம்
4. நிலப்பயன்பாடு, வீதி, கட்டிடங்கள்

20) ‘‘மரநிழலில் நிம்மதியாக நித்திரை செய்த ஒருவன் நித்திரை விட்டெழுந்து அதன் கிளையினை வெட்டி எறிவானாயின் அவன் செய்நன்றி இல்லாதவன் இக் கூற்று எச்சமயத்துடன் தொடர்படையது.

1. பௌத்தம் 2. இந்து 3. கிறிஸ்தவம் 4. இஸ்லாம்

(40 புள்ளிகள்)

www.lkedu.lk

சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

புள்ளி

புவியியல்

தரம் - 09 இறுதித் தவணைப் பரீட்சை-2016

சுட்டென் : .....

பகுதி - II

நேரம்
மணித்தியாலம்

- **1 ம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

1) i. பின்வருவனவற்றை தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்தில் மிக சரியாகக் குறித்துப் பெயரிடுக.

1. றொக்கி மலை 2. நைல் நதி 3. தக்கண மேட்டு நிலம்
4. கிறீன்லாந்து 5. அட்டகாமா பாலைவனம் 6. செங்கடல்

(12 புள்ளிகள்)

2) i. கீழே தரப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்குள் உட்படும் ஒவ்வொரு மாவட்டங்களைப் பெயரிடுக.

A - மகாவலி அபிவிருத்தி திட்டம்
B - கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம்
C – கிழக்கின் உதயம்

(3 புள்ளிகள்)

ii.(a) - வட பகுதிக்கு உரித்தான காலநிலை அம்சங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(b) - வடக்கு பிரதேசத்தின் பிரதான மனித நடவடிக்கை இரண்டை குறிப்பிடுக.?

(2 புள்ளிகள்)

iii.(a) - மகாவலி அபிவிருத்தி திட்டத்தினுள் அடங்கும் நீர் மின் நிலையங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(b) – மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள் இரண்டை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(3 புள்ளிகள்)

3) i. கீழே தரப்பட்டுள்ள நாடுகள் உள்ளடங்கும் ஆசிய வலயங்களை குறிப்பிடுக.

(a) ஈரான் b) பங்களாதேஷ் (c) மியன்மார்

(3 புள்ளிகள்)

www.lkedu.lk

ii. a) ஆசியப் பிராந்திய மக்கள் சமுத்திரங்களிலிருந்து பெறும் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.

b) - ஆசியப் பிராந்தியத்தின் கலாச்சார மாற்றங்களில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டை குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii. a) - ஆசிய பிராந்தியத்திற்குள் மேற்கொள்ளப்படும் இரு விவசாய நடவடிக்கைகளை பெயரிடுக.

(2 புள்ளிகள்)

b) - அவற்றுள் ஒரு விவசாய நடவடிக்கையின் முனைப்பான அம்சங்களை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக

(3 புள்ளிகள்)

4) i. கீழே தரப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் எவை?

A - ஈரவலயப் பாதுகாப்பு

B – ஓசோன் படைப் பாதுகாப்பு.

C- உயிர் பல்வகைமையை பாதுகாத்தல்

(3 புள்ளிகள்)

ii. a) இயற்கை வளங்களை அதிகம் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் இரண்டை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(b) சூழல் சமநிலை பாதிப்படைவதில் செல்வாக்குச் செலுத்தும் மனித நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

iii. A - சூழல் சமநிலை பாதிப்படைவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் இரண்டை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

B - நிலைத்திருக்கும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளக் கூடிய இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக.

(3 புள்ளிகள்)

5) i. புவியின் நீர்ப் பரம்பல் தொடர்பில் கீழ் தரப்பட்டுள்ள விகிதாசாரங்களில் உள்ளடங்கும் நீரின் வகைகளைக் குறிப்பிடுக.

1) 2.15% b) 0.03 % (c) 0.62%

(3 புள்ளிகள்)

ii. A- நீரைப் பயன்படுத்தும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

B - நீர்ப் பற்றாக்குறையினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(4புள்ளிகள்)

www.lkedu.lk

iii. A- வளி மாசடைவதில் செல்வாக்கு செலுத்தும் இரு வாயுக்களை பெயரிடுக. (2 புள்ளிகள்)

B- வளி மாசடைவதால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக. (3 புள்ளிகள்)

6) i. கீழே தரப்பட்டுள்ள நதிக்கரை நாகரீகங்கள் தோன்றிய ஆசிய வலய பிராந்தியங்களை பெயரிடுக.

a) இந்து நதி நாகரீகம்
b) குவாங்கோ நதிக்கரை நாகரீகம்
c) யூப்பிரடீஸ் தைகிரீஸ் நதிக்கரை நாகரீகம்

(3 புள்ளிகள்)

ii. ஆசிய வலய நாடுகளில்

a) சனத்தொகை அதிகம் கொண்ட நாடு
b) கைத்தொழில் அபிவிருத்தியில் முன்னணியில் உள்ள நர்டு
c) உலகில் அதிகளவில் கப்பல் கட்டும் கைத்தொழிலில் ஈடுபடும் நாடு
d) உலகில் மோட்டார் வாகனங்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடு என்பவற்றைப் பெயரிடுக

(4 புள்ளிகள்)

iii. (a) தற்போழுது ஆசிய நாடுகளில் கைத்தொழில் துறை உயர் அபிவிருத்தியை அடைந்துள்ளது. இதற்குச் சாதகமாக அமைந்த இரு காரணிகளை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(b) ஆசிய பிராந்திய நாடுகள் எதிர் நோக்கும் இரு சவால்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக.

(3 புள்ளிகள்)

7) i. 1:50000 தேசப்படங்களில் பயன்படுத்தப்படும் கீழ்வரும் கலாச்சார அம்சங்களுக்கான குறியீடுகளை வரைந்து காட்டுக.

a) வைத்தியசாலை b) பொலிஸ் நிலையம் c) கலங்கரை விளக்கம்

(3 புள்ளிகள்)

ii. a) 1:50000 தேசப்படத்தை அடிப்படையாக கொண்டு மாதிரி அளவுத் திட்டம் ஒன்றை வரைக (2 புள்ளிகள்)

b) மேலே தரப்பட்டுள்ள அளவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 6 சதுர கி.மீ. பூமிப் பிரதேசத்தை வரைந்து காட்டுக.

(2 புள்ளிகள்)

www.ikedu.lk

iii. (a) கரையோரப் பிரதேசத்தில் காணப்படும் பௌதீக அம்சங்கள் இரண்டை வரைந்து காட்டுக. (2 புள்ளிகள்)

(b) குழிவுச்சாய்வு, மேட்டுநிலம், கணவாய் ஆகிய பௌதீக அம்சங்களை சமவுயரக் கோடுகளின் துணையுடன் வரைநதுக் காட்டுக. (3 புள்ளிகள்)

www.lkedu.lk